திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தை ஆம்பூர் நகரில் அமைக்கின்ற ஆலோசனை இருந்து வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தற்போது வேலூரில் அந்த மாவட்ட முன்சீப் நீதிமன்றம் தலைமை இடமாக இருக்கிறது. அதற்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுமா? பாதிப்பு ஏற்படாமல் வேறு ஒரு மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தை அமைப்பதற்கு அரசு உத்தேசித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் பகுதியும், ஆம்புரை ஒட்டியுள்ள பகுதிகளும் அந்த டிஸ்ட்ரிக்ட் முன்சீப் கோர்டிலே அமைக்க வேண்டுமென்ற ஓர் செயற்குறிப்பு உயர்நீதி மன்றத்திடமிருந்து வந்திருக்கிறது.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்பூர் நகரில் அமைக்கப்பட இருக்கின்ற மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தோடு, எந்தெந்தப் பகுதிகள் சேர்க்கப்பட இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு குடியாத்தம் பிர்க்கா, குடியாத்தம் வட்டத்திலுள்ள பேரணாம்பட்டு பிர்க்கா, வாணியம்பாடி திலுள்ள வாணியம்பாடி பிர்க்கா, மற்றும்ஆம்பூர், துதிப்பட்டு ஆகிய பகுதிகள் அதோடு சேர்க்கப்படலாம்என்று கருதப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கூட்டுறவு சேவை சங்கங்களை ஒருங்கிணைப்புச் செய்யும் திட்டம்.

* வினா எண். 165—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் சில கூட்டுறவு சேவை சங்கங்களை இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் ஏற்கனவே பணியில் உள்ள தொழிலாளர்களுக்கு பணியில் தொடர மாற்று ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம் எடுக்கப்பட்டு வருகிறது.

1983 பிப்ரவரி 7]

(ஆ) சங்கங்களில் பணியாற்றும் சிப்பந்திகள் சம்பந்தமான விவரங்கள் எல்லா மத்திய கூட்டுறவு வங்கிகளிடமிருந்தும் கேட கப்பட்டுள்ளது. எல்லா சங்கங்களிடமிருந்தும் விவரங்கள் கிடைத் தவுடன் ஒருங்கிணைப்புச் செய்யும் சங்கங்களில் பணிபுரியும் சிப்பந்திகளின் ஆட்குறைப்பை தவிர்ப்பது பற்றி ஆராயப்படும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவைத்தலைவர் அவர்களே, இந்தகூட்டுறவு சேவை சங்கங்களை இணைக்க என்ன நடை முறை கையாளப்படுகிறது? இதுவரை எத்தனை சங்கங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் ஒட்டுமொத்தமாக 447 கூட்டுறவு சேவை சங் கங்கள் தன்னிறைவு பெறாத சங்கங்கள் என்று ரிசர்வ் வங்கி யினுடைய விதிமுறைக்கு உட்பட்டு கருதப்பட்டு அந்த அடிப் படையில் செங்கை மாவட்டத்தில் 72 தன்னிறைவு பெறாத சங் கங்கள் என்று கணக்கிடப்பட்டு அதில் 67 சங்கங்களை இணைக்க முதல்கட்டமாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 15 சங்கங்கள் இதுகாறும் இணைக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ள சங் கங்களை இணைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : இந்த சங்கங்களை இணைக்கிற காலத்திலே அங்கே பணிபுரிகின்ற தாற்காலிக ஊழியர்களுக் குப் பணிப் பாதுகாப்புக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மூலவினாவிற்கான விடையிலே இதுபற்றிக் கூறினேன். இது காறும் 15 சங்கங்கள் இணைக்கப்பட்டிருக்கின்றன. அந்த சிப் பந்திகளுக்கு பணி இழப்பு ஏற்பட்டுவிடவில்லை. ஆகவே பணிப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் சங் கங்களை இணைக்கும் பணி தொடர்கிறது.

திரு. பாபு ஜனார்த்தனன் : தலைவர் அவர்களே, பொரு ளாதார ரீதியில் சங்கங்களை இணைக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் வளர்கின்ற நிலையில் ஒவ்வொரு கிராமத்திற்கும் சேவை சங்கம் அவசியம். ஒவ்வொரு கிராமத்திலும் பொருளாதார அடிப்படையில் பார்க் காமல் தேவையின் அடிப்படையில் பார்த்து அவைகளை நடத்து வதற்கு மறுபரிசீலனை செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஒவ்வொரு கிரா மத்திற்கும் ஒவ்வொரு கூட்டுறவு சங்கம் என்பது நடைமுறை யில் வருவது நல்லதுதான். அது அரசினுடைய கருத்தும்கூட. ஆனால் குக்கிராமங்களில்கூட கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப் பட்டு அவை நான் வயபிள் என்ற நிலைக்கு வந்து விட்டன என்று ரிசர்வ் வங்கி கூறி சிலவரையறைகளை வகுத்துள்ளது. 3 ஆயிரம்

ஏக்கர் நீர்ப்பாசனம் உள்ள, நீர்ப்பாசனம் இல்லாத நிலம் இருக்க வேண்டும். குறுகிய காலக் கடன் வசதிகள் குறைந்த பட்சம் 2 லட்சம் இருக்கவேண்டும். இல்லையெனில் அந்த சங்கம் நான் வயபிள் சங்கமாகக் கருதப்பட்டு ரிசர்வ் வங்கி உத்திர விட்டு அந்த உத்திரவு நடைமுறைப்படுத்தப்பட்டு கட்டாயமாக ஆக்கப்பட்டு இருக்கிறது. காரணம், கூட்டுறவுச் சங்கங்களுக்கு குறுகிய காலக் கடன்களுக்கு நிதி வசதியை ரிசர்வ் வங்கி தரு கின்றது, ஆகவே அவர்கள் சில கட்டளையிடுகிறார்கள். அதை நடைமுறைப்படுத்தவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஒவ்வொரு ரெவின்யூ வில்லேஜுக்கும் ஒரு கூட்டுறவு சங்கம் இருக்கவேண்டு மென்ற முடிவை மறுபரிசீலனை செய்து அந்த சங்கங்களை வய பிள் என்ற அடிப்படையில் கொண்டுவரவேண்டுமென்று மாநில அரசும் ரிசர்வ்வங்கியிடம் வற்புறுத்தியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. சத்தியமூர்த்தி : இந்த கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படுகிறபோது ரிசர்வ் வங்கியின் இந்த விதிமுறைகள் நடைமுறையில் இருந்ததா? இப்போது அவை அனுசரிக்கப்பட் டதற்கு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே மட்டுமல்லாமல், பாரதத்தின் பல்வேறு மாநிலங் களிலே இந்தச் சங்கங்கள் பரவலாக அமைக்கப்பட்டு நான்-வயபிள் என்ற நிலைக்கு வந்து, குறுகிய காலக் கடன்களைத் திருப்பித் தராத நிலைக்கு வந்து ரிசர்வ் வங்கி அதனை ஆராய ஒரு குழுவை அமைத்து ஆராய்ந்தது அந்த ஆய்வின் அடிப்படை யில் அவையெல்லாம். Amalgamation of Co-operativ Societies to a viable xt nt is mevitabl என்ற முடிவுக்கு வந்திருக்கிறது. மாநிலங்களுக்கு எல்லாம் அறிவுரை கூறி கட்டளையும் இட்டது.

கிராமப்புற வீட்டு வசதி திட்டத்திற்காக ஒதுக்கப்படும் தொகை.

* வினா எண். 166—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்பு மிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமிய கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்திற்கு L.I.C. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து அரசு கடன் வாங்கி கொடுப்பதால் காலதாமதமாகின்றது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அரசே தனது நிதியிலிருந்து பணம் ஒதுக் கும் செயற்குறிப்பு உண்டா?